# அரன்வாயல் அ/மி ஸ்ரீ மரகதாம்பிகை உடனுறை ஸ்ரீ திருத்தாளீஸ்வரர் திருக்கோயில் தல வரலாறு மற்றும் திருப்பணி விவரங்கள்

தமிழர்கள் வெற்றி, வீரம் என்பவைகளையே மூச்சாகக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு இலக்கியங்களிலெழுந்த ''பரணி''யே சான்றாகும். ஆயிரம் யானைகளை வீழ்த்தி வெற்றி பெற்றவனை புகழ்வதே பரணி. போர்க்குரிய கடவுளான கொற்றவை (காளி) விழா, பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப்பட்டு வருவதை காண்கிறோம். இவ்வளவு சிறப்பு பெற்ற காளியை சிவனருளால் சிறையிட்டான் ஒரு சோழ மன்னன் என்றால் அந்த சிவன் அருள் பெற்ற இத்தலத்தின் பெருமையை அளவிட முடியுமா ?

தொண்டை மண்டலத்தில் மோகூர் பட்டணத்தில் காளி அருள் பெற்று அத்தெய்வத்தையே காவல் தெய்வமாகக் கொண்ட ஒரு குறும்ப அரசனுக்கும், காஞ்சி கரிகாலச் சோழனுக்கும் போர்மூள, தன் பக்தனுக்கேற்பட்ட துயர் துடைக்க, காளி சூலமேந்தி விற்படை கொண்டு வெங்கணை எய்து, சோழனை முறித்து பிணங்களை குவிக்க, அவன் அதிர்ந்து விமனடியில் வீழ்ந்து அரற்ற, முக்கண்ணனும், அஸ்திரம் உதவ, காளி கொக்கரித்து சூலம், வாள், கேடயம், அம்பு, பாசங்களேந்தி அண்டங்குலுங்க அமர்புரிய சிவனின் அம்பினால் காளியைச் சோழன் சிறை பிடித்து சிவனெதிரே நிறுத்த அவராணையால், பிற எல்லை காவலர்களான மாகாளி, பாசூராளி, பொற்றாளி, எல்லையாளி என்பவர்களுடன் ஐந்தாவதாக சேர்க்கப்பட்டாள். இப்புராணத்தலமே திருவள்ளூர் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் திருவள்ளூருக்கு 5 மைல் தென்கிழக்கிலுள்ள ''அரன்வாயல்'' கிராமம் ஆகும். இத்திருத்தலம் சென்னையிலிருந்து 40வது கிலோ மீட்டரிலும், சென்னை–திருவள்ளூர் ரயில் மார்க்கத்தில் செவ்வாப்பேட்டை ரோடு ரயில் நிலையத்திலிருந்து தெற்கில் 4–வது கிலோ மீட்டரிலும் அமைந்துள்ளது. இது திருப்பாசூருக்கு எல்லையாகும். காளியை சிறையிலிட்ட செய்தி கேட்டு சமணக்குறும்ப அரசன் இதற்கு காரணமான சோழனை தண்டிக்க அபிசாரஹோமம்

வளர்த்து அக்னியை வரவழைத்து வேண்ட, அக்னி தேவனும் சீறும் நாகமாய் மாறி நஞ்சு கக்கி சோழனை தீண்ட முயல, பாசூர் அரன் அரவத்தின் வாலைப் பிடித்து சுழற்றி எறிய, அவ்வாறு வீழ்ந்த இடமே அரன்வாலாகி நாளடைவில் ''அரன்வாயல்'' ஆகிவிட்டது.

தொலைப்பார்வையில் கோபுரம் மேலோங்கித் தென்படுவது கருவறை விமானம்தான். புராதன காலத்தே கோபுரங்கள் கோயில்களை அணி செய்யவில்லை. வீடுகளில் பிறைநிலா வடிவத்தில் மூங்கில் கொம்புகளைப் பொருத்தி மேலே ஓலைவேய்ந்த அமைப்பை ஒட்டித்தான் இறைவனின் கருவறைக்குக் கூரை அமைத்தனர். அது படுத்துள்ள யானையின் ப்ருஷ்டத்தை ஒத்திருந்ததால் ''கஜப்ருஷ்டம்'' என்ற பெயர் கொண்டது. கட்டிட கலை நுணுக்கங்கள் முன்னேற, விமானங்கள் கூட்டப்பெற்று, அதற்கு சிகையணியாக ''கஜப்ருஷ்டம்'' அமைந்தது. இவ்வமைப்பின் முழு அழகையும் இங்கே காணலாம். பொதுவாக கருவறை விமான கோபுரத்தில் கிழக்கு புரத்தில் **''சிவனின்''** மூர்த்தங்களும், தென்பாகத்தில் **''தக்ஷிணாமூர்த்தி''**யின் அம்சங்களும் மேற்கு பாகத்தில் ''மஹாவிஷ்ணு'' அம்சங்களும் வடக்கு பாகத்தில் ''ப்ரம்மா''வின் அம்ச மூர்த்திகளும் அமைந்துள்ளன.

தெற்கு பார்த்த வாயிலினூடே நுழைந்தால் 16 பட்டைகள் தீட்டப்பட்டு மேலே பூ வரிமானமும், உடலில் புராதனக் கல்வெட்டுக்களும் துலங்க, இருசோடசக் கோண ஸ்தம்பங்கள் தாங்கும் முன் மண்டபமும், அதன் பின் முக மண்டபமும் கருவறைக்கு மார்க்கமாய் அமைந்துள்ளன. தெற்கு பார்த்த சன்னதியில் ''ஸ்ரீ மரகதாம்பிகை அருள்பாலிக்கிறார்''. இடமிருந்து வலமாக உட்பிரகாரத்தில் சூரியன் கைலாசநாதர் (தனிசன்னதி), மாணிக்கவாசகர், பதஞ்சலி முனிவர், பிரஹார விநாயகர், ஸ்ரீசந்திரசேகரர் – அம்பிகை – சோமஸ்கந்தர் சன்னதி காசிவிஸ்வநாதர் – விசாலாட்சி அம்மன் சன்னதி, ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியஸ்வாமி சன்னதியும், பைரவர், ஸ்ரீதேவி – பூதேவி சமேதராய் பல்லவர் காலத்து போக சுந்தரமூர்த்தி பெருமாளும், சந்திரன் கருவறையை ஒட்டியுள்ள கோஷ்டங்களில்

நர்த்தன கணபதி, தட்க்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீப்ரம்மா, ஸ்ரீதுர்க்கா போன்ற பரிவார மூர்த்திகளும் அழகே அமையப்பெற்று அருள் பாலிக்கின்றனர். வெளிப்பிரகாரத்தில் நவக்கிரஹ திருக்கோயில், மடப்பள்ளி, அலங்கார மண்டபம், வாஹனக் கிடங்கு, நந்தி மண்டபம், பலிபீடம், த்வஜஸ்தம்பம் முதலியவையும் உள்ளது. திருப்பாசூர் தல புராணங்களைத் தழுவியெழுந்ததே இவ்வூர் என்பதை நிரூபிக்க காளி (ஸ்ரீசெல்லியம்மன்) தென்புறத்தில் வடக்கு பார்த்து கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். இவ்வம்மையை கண்ணுறும்போது ‘‘தாயாகி தந்தையுமாகி தலையளி செய்தெமை யாண்ட தூயாள்தன் திருபுருவஞ் சொல்லுபவோ’’ என்று காளியைப் பாசவதைப் ‘‘பரணி’’யில் போற்றும் அடிகள் நினைவிலோங்குகின்றன.

தமிழ்நாட்டில் காளி வழிபாடு புராதன காலந்தொட்டு இன்று வரை இல்லாத காலமேது. சிலம்பில் கூறப்பட்ட புகார் சம்பாபதி பல்லவர் காலத்து மாமல்லபுர மகிஷாசுர மர்த்தினி சிற்பங்கள் இவ்வுண்மையைத் தானே வலியுறுத்துகிறது. அக்னிச் சுடரை விளிம்பு அணியாகக் கொண்ட திருவாசி, கேடயம், பாசம், மணி, கபாலம், கத்தி, வாள், அம்பு, சூலம் என எட்டு கைகளிலும் மின்ன கச்சையணிந்த மார்பில் கபால யஞ்ஞோப வீதம் புரள, மண்டையோடுகள் பிரபையாய் ஜொலிக்க, செந்தீ கேசமாய் கிளர்த்தெழ உக்கிரத்திலும் கருணை ததும்ப, பிரகாரத்தில் வீற்றிருக்கின்றாள். அமுதமிருத்திய செப்பனைய தனத்தினாள். ‘சிறு முறுவல் தரளத் திருவதத்தினாள்’ என்ற கலிங்கத்துப்பரணி வர்ணனை எவ்வளவு அற்புதமாய் பொருந்துகிறது. காலடியில் மிதிபடும் அரக்கன் மகிஷன் அல்ல. நிசும்பனையும் வதம் செய்தவள் காளி. இவ்விக்ரகம் நிசும்ப சூதனியாயிருக்கலாம். முதலாம் விசயாலய சோழன் தன் முதற்கோயிலைத் தஞ்சையில் நிசும்ப சூதனிக்குத் தானே எடுப்பித்தான்? சோழர் பணிகொண்ட இக்கோயிலில் இவ்வன்னையே ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டும்.

தமிழகத்துப் பழக்கங்களையும், கொடைகளையும் விளக்கும் கல்வெட்டுக்களும் ஏராளமாக, நந்தி மண்டபம், உட்சன்னதி, வாகன மண்டபத்து தளம், இங்கெல்லாம் சுண்ணாம்பு போர்வையில் அழிந்துள்ளன.

பல்லவர் காலத்திலேயே இவ்வூர் சிறப்புற்று இருந்திருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக, கிராமத்தின் தெற்கு பகுதியில் ஏரிக்கரை புகாரில் இடிபாடுகளுக்கு இடையில் காணப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத போக சுந்தரமூர்த்தி திருமேனிகளே சான்று. (தேவியருள் ஒரு தேவி சிலை மறைந்துவிட்டது). தற்போது இக்கலைப் பொக்கிஷத்தை சிவன் கோவில் பிரகார சன்னதியில் பிரதிஷ்டை செய்தாகி விட்டது. தெற்கு பகுதியில் தேவியுடன் விஷ்ணு விளங்குகிறார். தமிழ்நாட்டில் விஷ்ணு வழிபாடு பழைய நாட்களிலேயே பரவியிருந்தது என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் ஏராளமாயுள்ளன. திணை மாலை, பரிபாடல் போன்ற சங்க நூல்கள் அவன் நீல வண்ணத்தையும், தாமரை கண்ணையும் குறிப்பிட்டுள்ளன. அவனுக்கு அக்காலத்தே கோயில்களும் இருந்தன. 'நீல மேனி நெடியோன்' கோயிலும் என்று சிலப்பதிகாரம் விளம்புகிறதல்லவா ? பல்லவர்கள் தொண்டை மண்டலத்தில் தங்கள் பேரரசை நிலைநாட்டி கலையுள்ளமும் தெய்வநெறியும் கொண்டு கண்கண்ட இடங்களையெல்லாம் கற்றறிகளாக்கினர். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம் என்ற தத்துவமே சித்தத்தில் கலந்து நாயன்மார்கள் ஆழ்வார்கள் வாயிலாக சமயக் கொள்கைகளை ஏற்று அதன் பலனாக சைவ, வைணவக் கோயில்களை ஸ்தாபித்தனர். கி.பி.8–ஆம் நூற்றாண்டில் ஆட்சி செலுத்திய இரண்டாம் நந்திவர்மன்' பல்லவர் கோன்' என்று ஆழ்வாராலேயே சிறப்பிக்கப்பெற்றவர். காஞ்சீபுரத்து வைகுண்ட பெருமாள் கோயில், கூரத்துக் கேசவன் கோயிலையும் கட்டினவன். காஞ்சியை ஒட்டிய இப்பிரதேசத்திலும், சிதைந்த இக்கோயிலையும் இம்மன்னனே அமைத்திருக்க வேண்டும். பல இடங்களில் பரமனில்லா பாழுங் கோயில்களைப் பார்க்கிறோம். ஆனால், இங்கு கோயில் மறைந்து விட்டது. அதற்குரிய மூலபுருஷன் வெகுகம்பீரமாய் அப்பழுக்கின்றி தன் தேவியுடன் அபூர்வ நிலையில் அமைந்துள்ளார். செவ்வரி

படர்ந்த கண்கள் தில நாசி என்றெல்லாம் வர்ணிப்பதை உணர்வது கடினம். ஆனால், இம்மூர்த்தியை காணும் பொழுது வர்ணனையின் அர்த்த புஷ்டிகள் விளங்கி விடுகின்றன.

  

உயர்ந்ததொரு ஆசனம். அதன் மேல் சுதர்சனம், பாஞ்ச ஜன்யம் இரு கைகளிலேந்தி ஒரு கையால் அபயமளித்து மற்றதை இடுப்பில் அமைத்த கோலம் கொண்டுள்ள போக சுந்தரமூர்த்தியின் அவசரந்தான் நமக்குக் கிடைக்கும் காட்சி. பல்லவர் சிற்பங்களில் சுதர்சன சக்ரம் பிரயோக நிலையில் வடிவமைக்கப்பட்டிருக்கும். பூணூலும் முப்பரி நூலல்ல. ருக் வேதத்திலுள்ள வஸ்த்ர யஞ்ஞோப வீதமே மார்பை அலங்கரிக்கிறது. வெகு புராதன காலத்தில் மார்பில் புரண்ட கிருஷ்ணார் ஜீனம் என்ற மான் தோல் பல மாறுதல்களுக்குட்பட்டு தற்போது பூணூலாய் (பூணும் நூல்) பரிணமித்துள்ளது.

அருகிலமர்ந்த தேவியின் அமைப்பும் அபூர்வமானதே. இடங்கையில் பத்ம மலரைத்தாங்கி, வலது புஜத்தை தொங்க விட்டு, ஒருகால் பீடத்தில் ஊனமற்றது. தொங்கிய நிலை, சற்றே ஒருதளித்து உட்கார்ந்த அமைப்பு இந்த அவசரத்தை வேறு எங்குமே காணமுடியாது. வலதுகையில் பத்ம மலரைத் தாங்கி இதே நேர் எதிர் அமைப்பில் வலது புறத்தில் இருக்க வேண்டிய தேவியின் சிலை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த போக சுந்தரமூர்த்தியின் திருமேனியும் இத்திருத்தலத்தில் தனி சன்னதி அமைத்து நித்திய பூஜை செய்யப்பட்டு வருகிறது.

இத்திருத்தலத்தின் மூலமூர்த்தியான அருள்மிகு ‘‘திருத்தாளீஸ்வரர்’’ (லிங்க வடிவில்) சுமார் 1000 வருடங்களுக்கு முன்பு மூதாதையர் நிலத்தை உழும்பொழுது தாளீ பனையின் அடியில் இருந்து கண்டெடுக்கப்பட்டவர். இத்தலத்தின் தலவிருட்சம் ‘‘தாளீ பனை’’ ஆகும்.

இக்கோயிலில் நித்திய பூஜைகள், பிரதோஷம், ஸ்ரீநடராஜ பெருமானின் ஆறு அபிஷேகங்கள், பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாணம், ஆனி திருமஞ்சனம், வெகு சிறப்பாக ஆருத்ரா தரிசனம் திரு ஊடல், திருக்கார்த்திகை தீபம், சோம வாரங்கள், தனுர் மாத பூஜை முதலியவை தவறாமல் நடந்து வருகிறது.

மூலவமூர்த்தி, பரிவாரமூர்த்திகள், கோஷ்டமூர்த்திகள் முறையே ‘‘பாலாலயம்’’ செய்விக்கப்பட்டு திருப்பணிகள் செய்வதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நன்கொடையாளர்கள், பக்தர்கள் தங்களால் இயன்ற நன்கொடையினை பொருளாகவோ, பணமாகவோ அல்லது வேறு எந்த வகையிலாவது வழங்கி கோயில் திருப்பணிகளை நிறைவேற்றி தரும்படி வேண்டுகிறோம்.

<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

***K.பூபாலன்***

***(தந்தை பெயர் A.T.கல்யாணசுந்தரம்) பரம்பரை அறங்காவலர்***

***அருள்மிகு திருத்தாளீஸ்வரர் திருக்கோயில்***

***சன்னதி வீதி, அரன்வாயல் கிராமம்***

***திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டம் – 602 025.***

***கைபேசி எண். 9444532886 / 9445296237***